உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

# சைவம்

இது

சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம்

எனப் பெயரிய

## சைவ மஹா சபையின்

மாதாந்தப் பத்திரிகை.


| மலர் 8 | துந்துபி௵ மாசிமீ 1923௵ பிப்ரவரிமீ | இதழ் 11 |
|---|---|---|


உள்ளுறை — பக்கம்.


| உள்ளுறை | பக்கம் |
|---|---|
| சிவஞானபோத முதனூல் ஆராய்ச்சி ... ... | 193 |
| கடவுள் அடியார்க்கெளியர் ... ... ... | 201 |
| நால்வர் முத்தி ... ... ... | 203 |
| சைவர்கள் வணங்குந் தெய்வம் ... ... ... | 213 |
| பிரமாண விளக்கம் ... ... ... | 215 |
| நன்கொடை ... ... ... ... | 216 |


இஃது

தேவகோட்டை

ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதன் செட்டியாரவர்களுக்குச்

சமர்ப்பிக்கப்பெறுவது.

---


பத்திரிகாசிரியர் :

இருக்கம் - ஆதிமூல முதலியார்,

(Retired Accountant, Military Accts., Department)

நெ. 43, பாளையப்பன் வீதி, எழுகிணறு, சென்னை.


---


சாது அச்சுக்கூடம், இராயப்பேட்டை, சென்னை.

**1923.**

தபாற்கூலி உட்பட வருடச்சந்தா ரூபா ஒன்றரை.

உ

சிவமயம்.

# சென்னைச் சிவனடியார் திருக்கூட்டம் வெளியிட்டுள்ள நூல்கள்.

| | | ரூ. | அ. | ப. |
|---|---|---|---|---|
| "சைவம்" என்னும் மாதாந்தரப் பத்திரிகை (1915ஆு முதல் 1919ஆு வரையில் வெளிவந்தவை.) காலிகோ கட்டடம் செய்தது | விலை | 6 | 0 | 0 |
| ஒவ்வொரு வருடப் பத்திரிகை | | 1 | 8 | 0 |
| "சைவம்" நிகழும் வருடப் பத்திரிகை வருடச்சந்தா | | 1 | 8 | 0 |
| ஞானப்பிரகாச சம்பாஷணை | | 0 | 1 | 0 |
| ஞானனந்த சம்பாஷணை | | 0 | 0 | 6 |
| ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | | 0 | 0 | 6 |
| விவாகவிதியும் கலியுக தருமமும் | | 0 | 0 | 6 |
| சைவ சமயிகளின் கடமை | | 0 | 1 | 6 |
| கோபப் பிரசாத உரை | | 0 | 1 | 6 |
| சிவநின்மாலிய மான்மியம் | | 0 | 0 | 6 |
| திருமுறைப் பெருமை | | 0 | 4 | 0 |

---

# "சைவம்"

## சந்தா விவரம்

வருடம் ஒன்றுக்கு தபாற் கட்டணம் உட்பட

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| இந்தியாவும், சிலோனும் | .... | ... | ரூபா | 1 | 8 | 0 |
| வெளி தேசங்களுக்கு | ... | ... | ,, | 2 | 0 | 0 |
| தனிப்பத்திரிகை | ... | ... | ,, | 0 | 3 | 0 |
| மாதிரிப்பிரதி | ... | ... | ,, | 0 | 3 | 0 |

## விளம்பர விவரம்

| | | | ஒரு மாதத்திற்கு | | | ஒரு வருடத்திற்கு | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஒரு பக்கத்திற்கு | ... | ரூபா | 5 | 0 | 0 | 35 | 0 | 0 |
| அரை பக்கத்திற்கு | ... | ,, | 3 | 0 | 0 | 25 | 0 | 0 |
| கால்பக்கத்திற்கு | ... | ,, | 2 | 0 | 0 | 15 | 0 | 0 |

பத்திரிகை வருடந்தோறும் சித்திரைமீ முதல் பங்குனி வரையில் ஒரு புத்தகமாகுமாறு பக்கங்களுக்கு இலக்கமிடப்படுவதனால், சந்தாதாரர்களுக்கு சித்திரை மாதப்பத்திரிகை முதலாகவே எல்லாப் பத்திரிகைகளும் தரப்படும்.

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

# சைவம்


| மலர் | துந்துபிஞு மாசிமீ | இதழ் |
|---|---|---|
| 8 | 1923ஞு பிப்ரவரிமீ | 11 |


### திருமந்திரம்

கூடியு நின்றுந் தொழுதெம் மிறைவனைப்
பாடியு ளேநின்று பாதம் பணிமின்கள்
ஆடியு ளேநின்று றறிவுசெய் வார்கட்கு
நீடிய வீற்றுப் பசுவது வாகுமே.

---

## சிவஞானபோத முதனூல் ஆராய்ச்சி

சிந்தாந்த சைவ சமையிகள் பலருக்கும் வந்தன பூர்வமாய்த் தெரிவித்துக்கொள்ளும் விண்ணப்பமாவது :—

திராவிட சைவ சித்தாந்த சாத்திரம் பதினன்கனுள் சிவஞானபோதமெனும் நூல் மற்றவைகட்கெல்லாம் முதனூலென்பது சைவசமையிக ளெல்லோரு மொப்பினதே. இந்நூல் ஆதியில் சீகண்டருத்திரரால் நந்தியெம்பெருமானுக்கு வடமொழியி லுபதேசிக்கப்பட்டுச் சீட பரம்பரையாற் பின்னர் பரஞ்சோதியாரால் மெய்கண்டதேவ நாயனருக்கு அனுக்கிரகிக்கப்பட்டு அம்மூர்த்திகளான் முதனூலுக்கிணங்கப் பன்னிரண்டு சூத்திரமாகவே தமிழ்ப்பாஷையில் மொழிபெயர்க்கப்பட்டதுடன் வார்த்திகமெனும் பொழிப்புரையும் உதாரண வெண்பாக்களு மவர்களா லருளப்பட்டதாயும் பூர்வந்தொட்டுச் சைவ பரம்பரையிலுள்ளோர் கூறி வருகின்றனர்கள்.

2. மற்றொரு சாரார், அதாவது தற்கால மேனட்டுச் சரித்திர ஆராய்ச்சி முதலியவற்றில் வல்லோர், சீகண்டருத்திரரால் நந்தி யெம்பெருமானுக் குபதேசிக்கப்பட்ட சிவஞானபோதமானது (12 சூத்திரமட்டும்) இப்போது தமிழ்ப் பாஷையிலுள்ள நூலே யென்றும் அது

தான் சீட பரம்பரையில் மெய்கண்ட தேசிகருக் குபதேசிக்கப்பட்ட நூலென்றும் வற்புறுத்திக் கூறு நிற்பர்.

3. இருதிறத்தாரு மவரவர் கோட்பாடுகளுக் கிணக்கமாகப் பிரமாணங் காட்டியுந் தேடியும் வருகிறார்கள். மகா மேதாவிகளாகிய விப்பெரியோர்கள் சங்கை கொண்டு விவகரிக்கும் விடயத்தில் நாயினேன் புகுந்து விவகரிப்பது சூரியப் பிரகாசத்தின் முன்னர் மின்மினிப் பூச்சி போலுமாம். எனினும் ஆசை வெட்கமறியாதெனும் பழமொழியைப் பொய்க்க அசக்தனானேன்.

4. மேனாட்டுச் சரித்திர ஆராய்ச்சியார் கூற்றுப்படி ஆரியராவார் சுமார் ௩௫-வருடங்களுக்கு முன் ஐரோப்பா கண்டத்தின் ருஷ்யாவெனும் நாட்டின் தென்பாகத்தினின்றும் நம் பரதகண்டத்தில் முதல் முதல் நுழைந்தவரன்றோ? அதன் முன்னர் நம் பரதகண்டம் ஆரிய பாஷையெனும் பெயரே யறிந்திலதன்றோ? தமிழ்ப் பாஷையே பரத கண்ட முழுதும் அநாதியாயிருந்ததன்றோ? (இவை மேனாட்டுச் சரித்திரக்காரர் கூற்று). இதை நம்மவர் சிலரும் ஒப்பியுமிருக்கிறார்கள். இவ்வாறிருக்க சீகண்டருத்திரர் நந்தியெம்பெருமானுக்குச் சிவஞான போத முபதேசித்த தெக்காலம்? நந்தி யெம்பெருமான் சிலாதர ரிஷியின் புத்திரரன்றோ? வசிஷ்ட மகாரிஷியின் பௌத்திரியாகிய சுயசையை மணம் புரிந்தவருமன்றோ? வசிஷ்டரோ ஸ்ரீ இராமர் காலத்தவரு மவர்காலத்துக்கு வெகு நாள் முந்தினவருமன்றோ? இவர்களெல்லாம் ஆரியகுலத் திலகர்கள். பரமேதிகாசமாகிய சிவ ரகசியத்திலும் வான்மீகியாருளிய இராமாயணத்திலும் வியாசபகவானால் வெளியிடப்பட்ட இலிங்கஸ்காந்தாதி மஹா புராணங்களிலும் நந்தியெம்பெருமானார் சரித்திரங் கேட்கப்படுகின்றது. வியாசரோ பாரத வீரருற்பத்திக்கு ஆதியாயுள்ளவர். பாரதகாலம் கலியுகத்துக்கு முந்தியது. அதாவது ௫௩-வருடத்துக்கு முற்பட்டது. ஆதிகாவியமெனப் பெயர் பெற்ற வான்மீகியா ரிராமாயணம் பாரதத்துக்கு முந்தியது. அகத்தியர் சரித்திரம் இராமாயணத்தில் கேட்கப்படுகின்றது. நந்தி தேவர் அகத்தியருக்கு முந்தினவர். அகத்தியர் தமிழ் முதற் சங்கமிருந்து தமிழ் ஆராய்ந்த பெரியோர். இவ்வாராய்ச்சியால் ௰௯-வருடங்களுக்கு முன்னரே குறிப்பிட்டறியக் கூடாத எக்காலத்திலேயோ நந்தி தேவர் சிவதீட்சை யடைந்து சிவஞானபோதம் உபதேசிக்கப் பெற்ற காலமாகக் கொள்ளவேண்டும்.

5. மேனாட்டுச் சரித்திரவாராய்ச்சியார் கூற்றுப்படி ௩௯-வருடங்களுக்கு முன்னர் வடமொழி யெனும் பெயரே நம் பரதகண்டத்தி

விருந்திருக்க நியாயமில்லை யென்பது மேலே காட்டப்பட்டிருக்கிறது. அவ்வாறிருக்கச் சிவஞான போதமெனுந் தமிழ் நூல் பனிரெண்டு சூத்திரங்களாகப் பிரிக்கப்பட்டுளதில் சூத்திரமெனும் மொழியே வடமொழிக் குரித்தானதாயும், வடமொழி வியாகரணத்தில் சூத்திரமிவ்வகை இலட்சணமுளதெனக் கூறப்பட்டதாயு மிருக்கிறது. மேலு மொவ்வொரு தமிழ்ச் சூத்திரத்திலு மனேக வடமொழிகள் கலந்திருக்கின்றன. இந் நூலுக்கிட்ட பெயரும் சிவ—க்ஞான—போதம் என மூன்று வட மொழியானுயதே. இத்தகைய வேதுக்களை நோக்கும்போது சீகண்ட ருத்திரன் நந்திதேவர்க்கருளியபோதே அதாவது ஆரியபாஷை நம் நாட்டில் புகும் முன்னரே தமிழ் மொழிகளுடன் ஆரிய மொழிகளையுங் கலந்து நூல் செய்து சிவஞானபோதமென ஆரிய மொழிப் பெயரு மீட்டு அந்நூலை உபதேசித்தாரெனக் கொள்ள வேண்டும். பூர்வமாயுள்ள சங்க நூல்களி லநேகம் வடமொழிக் கலப்பின்றித் தமிழ் மொழிகளா லியற்றப்பட்டு அந்நூல்களுக்குத் தமிழ்பாஷை நாமமே பூர்வீகாள் புனைந்திருத்தல் தமிழ் ஆராய்ச்சியோர் பல்லோருமறிந்த விடயமே. அவ்வாறிருப்பது தான் சிறப்பென்றுங் கொள்ளுகிறுர்கள். இவைகளைப் போலன்றே ஆரிய பாஷை புகு முன்னர் சிவஞானபோத முற்பத்தியா யிருந்தால் அது சுத்தத் தமிழ் மொழிகளா லாக்கப்பட்டிருக்க வேண்டும். அவ்வாறின்றி வடமொழிகளையுந் தென்மொழிகளையுங் கலந்து வடமொழி வியாகரணத்தை ஆதாரமாகக் கொண்டு பிரிவுகள் முதலிய வேற்பட்டிருப்பதைப் பாரபட்சமன்னியில் நிதானிக்குங்கால் சிவஞான போதமெனுந் தமிழ் நூல் வடமொழி சிவஞான போதத்தின் மொழி பெயர்ப்பா யிருக்கவேண்டுமென்றே நிதரிசனமாய் விளங்குகிறது.

6. இது நிற்க. மெய்கண்ட சிவம் சிவஞானபோத முபதேசிக்கப் பெற்ற போழ்து மூவாண்டைப் பிராயத்தார். ஆரிய பாடைக்குரிமை யல்லாத குலத்தில் ஜெனித்தவர். ஆனதால் வடமொழிச் சப்தாதிகள் அவர் வாக்கில் திருத்தமாய் வாராதாம். ஆனதால் தமிழ்ச் சிவஞான போதத்தைத் தான் பரஞ்சோதியார் அவருக்குக் கொடுத்திருக்க வேண்டுமாம். இவ்வாறு பொருள்பட வொருவர் எழுதியிருக்கிறுர். (அவர் சொந்த மொழிகளை யெழுதினுல் அம்மொழிகளைப் படிக்குஞ் சைவர்கள் மிக வருந்துவார்கள். சில வருடங்களுக்கு முன்னர்ப் புற மதத்தாரொருவர் நம் மெய்கண்ட தேவரைச் சுட்டி மெய்கண்டார்க்கு வட மொழிப் பயிற்சியில்லை யென்றுங் கீர்வாண பாஷை தெரியாதென்றும் மற்றுஞ் சில வெழுதினர். அக்காலத்துச் சைவப் பெரியோர்கள் கொஞ்சமும் பொறுர்களாகி அதைக் கொடுஞ் சிவ தூஷணமாகக்

கொண்டு அதற்குப் பிரதி யுத்தரமாக வொரு புத்தக மெழுதி யிருக்கிறார்கள். அதில் "எமது சிவஞான மணிக்கு வடமொழியுந் தென்மொழியுங் கற்று வந்தனவல்ல" வென்றும் "திருவவதாரஞ் செய்து $2\frac{1}{2}$ - வருடமளவும் பால் முதலிய ஆகாரங் கொள்ளுதலும், அழுதலுஞ் சிரித்தலும், விளையாடுதலும், ஓடுதலும், ஆடுதலும், வார்த்தை சொல்வதுமின்றிக் குழவிக்கல்லொத்துத் தரையிற் கிடந்து திருவருள் உபகரிக்க ஒரு குறையுமின்றி வளர்ந்து வந்தனரென்றும்" இத்தகைய பெருமானைச் சுட்டி நமதன்பர் நிந்தையெழுப்பியது ஆச்சரியத்திலு மாச்சரியமாமெனவும் மிக்க பரிதாபத்துட னெழுதப்பட்டிருக்கிறது. மெய்கண்ட சிவம் (சுகர் ஆதியோர் போல்) சாம்சித்தராய்த் திருவெண்காட்டடிகள் அனுக்கிரகத்தினால் அவதரித்த மகானெனவவர் சரித்திரங் கூறுவதை யேனோ விக்கூற்றார் கொள்ளாமல் உலகில் ஜெனிக்கும் சாமானிய சிசுவைப்போ லெண்ணினார்கள். இது கலியின் வன்மையே. சமீப காலத்தில் அவதரித்த திராவிடமா பாஷியகர்த்தர் சிவஞான முனிவரின் வடமொழிப் பயிற்சி யித்தன்மைத்தென வறியாத சைவ சித்தாந்திகளுமுளரோ. வார்த்திகப் பொழிப்புரையும், உதாரண வெண்பாக்களு மருளியது மெய்கண்ட சிவமென்பதை வொப்பாதிருக்க வொருவராலும் முடியாதன்றோ? சூத்திரங்களி லடங்கியிருக்கும் விடயங்களைப் பிரித்து அதிகரணமென்னும் வடமொழிப் பெயரிட்டோரியாவர்? பொழிப்புரையினும் உதாரண வெண்பாக்களிலும் சூத்திரத்திற் காணுமாறு அநேக வடமொழிகள் ஸ்திதி, அத்துவிதம், சதந்திரம், ஏகாநேகம், அந்தக்கரணம், சத்து, அசத்து, ஸ்ரீ, அசிந்திதன், பஞ்சாவஸ்தன், தைவம், பக்தர், காஷ்டம், ஆலயம், வேஷம் முதலிய பல வடமொழிகள் காணக் கிடக்கின்றனவன்றோ? இதற்கென்ன சமாதானஞ் சொல்வார்கள்? இதுவும் நிற்க.

7. (க) தமிழ் சிவஞானபோதச் சிறப்புப்பாயிரத்தில் காணப்படும் "உயர் சிவஞானபோத முரைத்தோன்" எனும் பதத்திற்குச் "சிவஞானபோதத்தைத் தமிழாக அருளிச் செய்தவ" னெனப் பாண்டிப் பெருமாளும் "சிவஞானபோதமென்னும் வடநூலை மொழிபெயர்த்துக் கூறி வார்த்திகமென்னும் பொழிப்புரை செய்தோன்" என மாதவச் சிவஞான முனிவரும் உரையியற்றி யிருக்கின்றனர்.

(உ) தமிழ்ச் சிவஞானபோதச் சிறப்பை ஆன்றோர் ஒரு வெண்பாவினாற்றுதித்திருக்கிறார்கள். அதில் "போதமிகு, நெய்யினுறுசுவையா நீள்வெண்ணை மெய்கண்டான், செய்த தமிழ் நூலின்றிறம்" எனக் கூறியிருக்கிறார்கள், "மெய்கண்டான் செய்த தமிழ் நூல்" என்றதில்

பொழிப்புரையும் உதாரண வெண்பாக்கள் மட்டுமடங்கி யிருக்கிற தெனக் கூறுதல் பொருந்தாது. அவைகள் நூலின் பொருளை விளக்க வெழுந்த அர்த்தங்களே. ஆனதால் மெய்கண்டார் செய்த தமிழ் நூலானது பொழிப்புரையும் உதாரண வெண்பாக்களோடுங் கூடிய 12 தமிழ் சூத்திரங்களாகிய தமிழ்ச் சிவஞானபோதமே.

(ரு) மெய்கண்ட பரமாசிரியன் முதன் மாணுக்கராகிய அருணந்தி சிவம் தாம் குரவரின் ஆக்ஞைப்படி யருளிய சிவஞான சித்தியின் சுபட்சத்துக்கு வழி நூலின்னதென மொழிந்த "என்னை யிப்பவத்திற் சேரா" வெனுஞ் செய்யுளில் "மெய்கண்டானூல் சென்னியிற்கொண்டு சைவத் திறத்தினைத் தெரிக்கலுற்றும்" என்றருளியிருக்கிறது. இச் செய்யுளில் "மெய்கண்டானூல்" எனக் கூறிய பதங்களில் 12-தமிழ்ச் சூத்திரமொழிந்து ஏனைய பொழிப்புரை உதாரண வெண்பாக்கள் மட்டும் தான் அடங்கி யிருக்கிறதெனக் கூறுவது கொஞ்சமும் பொருந்தாது. ஏனெனில் 12 - சூத்திரங்கடான் நூலெனப் பெயர்பெறும். மற்றவை கள் அவைகளின் உரையே. மெய்கண்டானூல் எனும் பதம் மெய்கண் டாருக்குப் பரஞ்சோதியார் கொடுத்த நூல் என்னும் பொருள் கொள்ள விடமுமில்லை. ஏனெனில் அப்படிப் பொருள் கொள்ளுங்கால் நூல் என்பதில் பனிரண்டு சூத்திரமட்டு மடங்கி மெய்கண்டாரருளியதென விருவகையாரு மொப்புக் கொண்டிருக்கிற வார்த்திகப் பொழிப்புரை, உதாரண வெண்பாக்கள் அடங்காமல் நிற்கும். இக்கருத்தினாலன்றே சிவஞான சித்திக் குரை யெழுதிய திராவிட மகா பாஷ்யகர்த்தராகிய சிவஞான முனிவரும் மற்றை யுரையாசிரியர்களும் மெய்கண்ட தேவன் மொழி பெயர்த்தருளிச் செய்த சிவஞானபோத நூலென்றே இதற் குரை கண்டார்கள். மெய்கண்டார் முதல் மாணுக்கராகிய அருணந்தி சிவாச்சாரியாராகிய சகலாகம பண்டிதர் மெய்கண்டாரினும் வயதில் மிக வும் முதிர்ந்தவர். இப்பெரியோர் மெய்கண்ட தேவரை நேரில் தெரி சிக்கப்பெற்றும் அத்தேவரிடம் உபதேசம் பெற்றும் சிவஞானபோதம் பாடங் கேட்டும் சிவஞான சித்தி யெனும் வழி நூலை ஆச்சாரியார் கட் டளைப்படி இயற்றியவருமாவர். ஆனதால் இக்காலம் மேனாட்டு நாக ரிகத்தைக் கைப்பற்றினோர் இப்படி இருக்க வேண்டும். அப்படித் தான் இருக்கும் என யாதொரு பிரமாணமுமின்றித் தங்கள் மனமே பிர மாணமாக எழுதி வருபவைகளை விட மெய்கண்ட தேவரிடம் நேரில் பாடங் கேட்ட சகலாகம பண்டிதர் கூற்றுக்கு எவ்வித சந்தேக ஆட்சே பனை யன்னியில் கௌரவங் கொடுத்து அதுதான் உண்மையெனப் பிரத்தியட்ச சாட்சியத்தால் ஒப்புக்கொள்வது சைவ சித்தாந்திகள் பல்

லோருக்கும் கடமையாகும். சிவஞான சித்தி பரபக்ஷத்துக் குரை யியற்றிய மற்றோருரையாசிரியர் தாம் கூறிய அவை யடக்கத்தில்,

* * * * *

"நல்லருள்புரியும் நந்திகேசன், ஓதியபோதத் துண்மை தன்னைச், செந்தமிழ்ப் படுத்தி, யத்திருநாமத்தாற் றந்துரைத்தருளினன், றபோதனர் தமக்கு, வெண்ணை மாநகர் மெய்கண்டதேவன், அவனடிபரவித் தொழுதருள் பெற்ற அருணந்தி தேவன் சிவஞானசித்தி, யென்றுபேரிட்டுப்பரமதந்தன் மதமெனவிரண்டாக்கி"—

* * * * *

எனக் கூறியுள்ளார். இதனாலும் மெய்கண்ட தேவரே தமிழ்ப் பாஷையில் சிவஞானபோதத்தை மொழி பெயர்த்தாரென உள்ளங்கை நெல்லிக் கனிபோல் விளங்குகிறது.

(ச) உமாபதிசிவம் தாமருளிய சிவப்பிரகாசமெனும் நூலில், நூல் மரபு கூறிய செய்யுளில், "தெரித்த குரு முதல்வருயர் சிவஞான போதஞ் செப்பினர். பின்பவர் புதல்வர் சிவஞான சித்தி விரித்தனர்" எனக் கூறியிருப்பதை நோக்குங்கால் தம் மரபின் முதற் குரவராகிய மெய்கண்ட தேவரே, சிவஞானபோதத்தை யருளினரென்று கூறிய தாகச் சொல்ல வேண்டி வருமேயன்றி 12 - சூத்திரமொழிந்த மற் றவைகளை மட்டு மருளினரென்று சொல்ல வாரா. சிவப்பிரகாச நூலுக்கு மதுரைச் சிவப்பிரகாசர் இன்றைக்குச் சுமார் 430 வருடங்களுக்கு முன் அதாவது உமாபதிசிவ மெழுந்தருளியிருந்த சுமார் 175 வருஷங் கட்குப் பின் உரையியற்றியுள்ளார். அவ்வுரையில் இச்செய்யுளுக்கு மூலக் கிரந்தம் பனிரெண்டினுமுள்ள அர்த்தத்தைத் தமிழாகப் பனி ரெண்டு சூத்திரமாக விரித்து அந்த நூலின் பெயராலே சிவஞானபோத மென்று செய்தருளினரென வெழுதியிருக்கிறது. உமாபதி சிவத்துக் குப் பின்னர் ஜீவ தசையிலிருந்த மதுரைச் சிவப்பிரகாசரிவ்வாறெழுதி யிருப்பதற்கு மிகுதியான கௌரவங் கொடுக்க வேண்டும்.

(ரு) திராவிட மகா பாஷ்யகர்த்தராகிய சிவஞான முனிவர் தாமி யற்றிய சிவஞானபோதச் சிற்றுரையில் மெய்கண்ட தேவரைத் துதித் தருளிய செய்யுள் வருமாறு:— "சிறியவாடியிற் பெரிய மால்வரைப் பொருள் செறிந்தாங்-கறிவு நூல்களின் முடி பெலாமகத் தடக்கியதோர், நெறியினீடிய நிகழ் சிவஞானபோதத்தைக்-குறிய தீந்தமிழாலுரை குர வனைப் பணிவாம்" என்பதே. இச்செய்யுளாலும் சிவஞானபோதப் பனிரெண்டு சூத்திரத்தைத் தமிழாலுரைத்தவர் மெய்கண்ட தேவ ரென்றே வெள்ளிடைமலை போல விளங்குகிறது. தீந்தமிழாலுரைத்

தாரெனவே, தமிழாலுரைப்பதற்கு முன்னர் வேறுபாடையிலிருந்த தாகவே கொள்ளக் கிடக்கிறது.

(சு) நிரம்பவழகிய தேசிகரியற்றிய சேதுப்புராணம் கடவுள் வாழ்த்தில் "அல்லாத பரசமைபத்தலகைத்தேர் விண்டகல வகல்புனற் பெண்ணை வயல்சூழ் வெண்ணெப் -பொல்லாத விபமுகத்துப் புத்தே டன்பாற் புனிதசிவாகமம் பொருண்மை பொருந்தவாய்ந்து, நில்லாத நிலையிது மற்றொன்று மொன்றாய் நிற்குநிலையிதுவென மெய்ந்நெறி தேர்ந்தியாரும், வெல்லாத சிவஞானபோதஞ் சொன்ன மெய்கண்டான் சரணமுடி மீதுகொள்வோம்" என்பதனாலும் சிவஞான போதமெனும் நூலை யியற்றினவர் மெய்கண்டாரெனவே விளங்குகிறது. சிவஞான போதஞ் சொன்னாரென்றால் 12 சூத்திரம், வார்த்திகப் பொழிப்பு, உதா ரண வெண்பாக்கள் இவைகளடங்கிய சிவஞானபோதமெனப் பொருள் கொள்ள வேண்டுமே யொழிய ஒன்றைவிட்டு ஒன்றைக் கொள்வது பொருத்தமிலது. இதுகாறும் நூலினது பிரமாணத்தால் காட்டப்பட் டது, யுக்திவகையா லொன்றுரைக்கின்றேன். நவீனக் கொள்கையார் கூற்றுப்படி தமிழ்ச் சிவஞானபோதம் சீகண்டருத்திரரால் நந்தி யெம் பெருமானுக் குபதேசிக்கப்பட்டிருந்தால் சீகண்டர் மெய்கண்டாரை விட எத்தனை திறத்திலோ சிறப்புடையவராயிருக்கையில் தமிழ்ச் சிவ ஞானபோதத்துக்குச் சிறப்புப்பாயிர மியற்றினோர், அப்பாயிரத்திலும், மெய்கண்டார் முதன் மாணாக்கர் அருணந்திதேவர் ஆதியோரியற்றிய நூல்களின் நூல் வழிச் செய்யுட்களிலும் சிவஞானபோத முரைத் தோன் சீகண்டன், சீகண்டர் நூல், சீகண்டர் தமிழ், சீகண்டர் சிவ ஞானபோதஞ் செப்பினர் என்றல்லவா கூறியிருக்கவேண்டும் அப்படிக் கன்றி சிவஞானபோத முரைத்தோன் மெய்கண்ட தேவன், மெய்கண் டான் செய்த தமிழ்; மெய்கண்டானூல், குரு முதல்வருயர் சிவஞான போதஞ் செப்பினர், என ஏன் கூறவேண்டும்? இன்னமுஞ் சைவ சித்தாந்த நூல்களின் உரையாசிரியர் பலராலும் வடமொழிச் சிவஞான போதத்தை மெய்கண்ட தேவர் தமிழில் மொழிபெயர்த்தாரெனவே எழுதப்பட்டிருக்கிறது.

(எ) மற்றுமோர் நியாயமுளது, சைவ சித்தாந்த மரபுக்குரிய திரு வாவடுதுறை யென்னுஞ் சைவாதீனம் இற்றைக்குச் சுமார் ரூா ஆண்டு கட்கு முன் தோன்றியது, இவ்வாதீனம் மெய்கண்டார் சந்ததி. "மெய் கண்டான் சந்ததிக்கோர் மெய்ஞ்ஞானபானுவாகிக் குயிலாரும் பொழிற் றிருவாவடுதுறை வாழ்குரு நமச்சிவாய தேவன், சைலாதி மரபுடையான் றிருமரபு நீடூழிதழைகமாதோ"-என முதற் குரவர் நமச்சிவாய மூர்த்தி

களை இவ் ஆதீன பரம்பரையார் துதித்திருப்பதனுலும் இவ்வுண்மை விளங்கும். மெய்கண்டார் ஆதிய சந்தான குரவர் நால்வர்களுடைய குருமூர்த்தங்களுன்கும் திருவெண்ணெய்நல்லூர், திருத்துறையூர், சிதம்பரம் இத்தலங்களிலிருந்து விளங்கி வருவதில் இந்தக் குருமூர்த்த ஆலயங்களும் அவைகளுக்கு ஏற்பட்ட பண்டையக் காலத்திய வருவாய்களும் இத்திருவாவடுதுறை ஆதீனத்தார் ஆளுகைக்குள்ளேயே தொன்றுதொட்டு இருந்து அக்குருமூர்த்தங்களுக்கு நித்திய நைமித்திக ஆராதனைகளும் நடத்தப்பட்டு வருகின்றன. இந்த ஆதீனத்தாரும் பண்டைய காலந்தொட்டே சிவஞானபோதம் தமிழ்ப் பனிரெண்டு சூத்திரமும் மெய்கண்ட தேவரால் வடமொழியிலிருந்து மொழி பெயர்க்கப்பட்டு அதற்கு வார்த்திகப் பொழிப்பும் உதாரண வெண்பாக்களும் அருளப்பட்டதெனவும் சென்ற நூறு ஆண்டுகளாகவே கைக்கொண்டும் வருகின்றார்கள். சூரியனுர் கோயில் முதலிய மற்றைச் சைவ ஆதீனத்தார்களும் இவ்வாறே கடைப்பிடித்திருக்கின்றார்கள். இதுகாறுங் காட்டியவற்றால் தமிழ்ச் சிவஞானபோதம் வடமொழியின் மொழிபெயர்ப்பே யெனக் கொள்ளக் கிடக்கிறது.

மேலே நூன்முகத்தாலும் யுக்தி வாத்ததாலும் விவரித்துக் காட்டியபடி மெய்கண்ட தேவ நாயனுர் கால முதல் அவர் மாணுக்காதியோராலும் சிவானுபூதிச் செல்வர் பலராலும் கூறியிருப்பதைச் சற்றும் யோசியாமல் தமிழ்ச் சிவஞானபோதமெனும் நூல் வடமொழியின் மொழிபெயர்ப்பென்று சொல்பவர்களை யெல்லா மொருங்கு சேர்த்து "குரும்பாட்டுக் கூட்ட" மென வொருவர் கூசாதெழுதியிருக்கின்றார். இவர் மனவலிமை யெத்துணையதோ அறிகிலேன். கலியின் வலிமை யெனச் சொல்வதைவிட வேறுவகையாய்ச் சொல்லவுமெழுதவும் நாவுங் கையுமெழவில்லை. குரும்பாட்டுக் கூட்டமென்று கூறிய மொழிகளடங்கிய அவர் வியாசத்தையும் அந்தோ சித்தாந்தமெனும் பத்திரிகையில் பிரசுரித்துமிருக்கின்றார்கள்.

மேற் காட்டிய நியாயங்களை யிருதிறத்தாரும் நடுவு நிலைமையாய்த் தழுவித் தத்தம் கொள்கைகளைப் பிரமாண மூலமாகத் தாபித்துத் தமிழுலகுக்குக் காட்டுவார்களெனப் பிரார்த்திக்கிறேன்.

திரு. மா. சாம்பசிவம் பிள்ளை.

3—2—23. திருச்சிராப்பள்ளி.

# கடவுள் அடியார்க் கெளியர்

## (இந்துசாதனம்)

கடவுள் தமது அடியார்களுக்கு எளி வந்து அவரவர்களுக்கு வேண்டிய போகங்களை எல்லாம் முன்னின்று ஊட்டுவர். அவர் அடியார்களுக்கு மாத்திரமன்றிச் சகல சீவாசிகளுக்கும் அவரவர் விரும்பிய போகங்களை ஊட்டுவாராயினும், அடியார் விரும்பிய போகங்களை விசேட கருணைகொண்டு விரைந்தூட்டி யருள்வர். அடியார்களிடத்து விசேட கருணை வைப்பது கடவுளிடத்தே பக்ஷபாத தோஷத்தை ஏற்றுதோ எனின், ஏற்றுதென்க. என்னை? தம்பால் அடிமை பூண்டார்க்கு அவர் விசேட கருணை சுரப்பதே அவருடைய காருண்ணிய முறையாம். தமக்குத் தொழும்பு பூண்டார்க்கும், தம்மைக் கிஞ்சித்தும் பொருட்படுத்தாத லௌகிகர்க்கும் அவர் ஒப்பவே கருணை புரிவாராயின், தமதடித் தொண்டைத் தாமே அவமதித்தமையாகிய பெருந் தோஷத்தின்பாற் பட்டுவிடுவர். உலக சேவையினும் கடவுட்சேவை பல்லாயிர மடங்கு சிறந்துளதோன்றுதலால், அங்ஙனம் சிறந்த சேவையைப் புரிவார்க்குச் சிறந்த கருணை புரிதலே கடவுளுடைய நீதி எனப்படும். இங்ஙனம் சிறந்த கருணையைச் சிறந்தோராகிய தமதடியார்க்குக் கடவுள் புரியாராயின், அங்ஙனம் புரியாமையே அவர்பால் தோஷத்தை ஏற்றிவிடும் என்க.

இனி, கடவுள் தமது அடியார்க்கு விசேட அருளைப் புரியாராயின், அவருக்குத் தொழும்புபூண் டொழுகும் அடிமைத்திறத்தை ஒருவரும் விரும்பமாட்டார். அவ்வடிமைத்திறத்தின் பெருமாட்சியினை உலகோர்க்குப் புலப்படுத்த வேண்டுவதும் அவருடைய காருண்ணிய முறையேயாதலால், இந்தக் காருண்ணிய முறையிற் பிறழாது, கடவுள் தமது அடியாராயினோர்க்கு விசேட திருவருளைப் புரிந்தருள்வர் என்க.

இன்னமும், எவ்வெச் செயலும், அவ்வச் செயலைச் செய்வாருடைய நிலையளவாக நிறுக்கப்படும். ஒரு தனவந்தன் புரியுந் தானத்தினும், ஒரு வறியவன் புரியுந்தானம் ஏற்றமுடைத்தாக எண்ணப்படும். அறிவுடையான் ஒருவன் செய்யும் உலக நன்மையினும். மூடன் ஒருவன் செய்யும் உலகநன்மை பெரிதாக மதிக்கப்படும். வயதின் முதிர்ந்தான் ஒருவன் செய்யும் உபசாரத்தினும் ஒரு சிறுபிள்ளை செய்யும் உபசாரம் பெரிதுஞ் சிறந்ததாக வைக்கப்படும். இங்ஙனமே செயல்கள் எல்லாம் அவற்றைச் செய்வாரது நிலைகொண்டு நிறுக்கப்பட்டு, அந்த அந்த நிறைக்கியைந்த பலனை அளித்தலே கோணாத நீதி எனப்

படுமாதலால், உடல் பொருள் ஆவி மூன்றையும் தமக்கே ஒப்புவித்து நிற்கும் அடியார்கள் செயலை ஏனையோர் செயலினும் மிக மேலானதாகக்கொண்டு அவர்களுக்கு விசேட அனுக்கிரகம் புரிதலே கடவுளுடைய பரமநீதி எனப்படும் என்பது காண்க.

இந்த நீதிபற்றியன்றே எமது கடவுளாகிய தியாகராசப் பெருமான் தமதடித்தொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனருடைய வேட்கையை நீக்குதற்பொருட்டு அர்த்தயாமத்திலே பரவையாரிடத்துத் தூது சென்று, அவ்விருவரையும் பிணக்கு நீக்கி இணங்குவித்தது. பெண்ணுசை லௌகிக விருப்புகளுட் கடைப்பட்டதொன்ருக, இந்த விருப்பை அகற்றுவதன்றி அதனை அருத்துவதும் கடவுளுடைய கருணை எனப்படுமாலோ எனின், விருப்புகளை அருத்துவதெல்லாம் அவற்றை அகற்றும் பொருட்டேயாம். சுந்தரமூர்த்தி நாயனரிடத்துக் கிளர்ந்த விருப்பு முன்வினை காரணமாகக் கிளர்ந்த பிராரத்தமாமென்பது அவருடைய சரித்திரத்தைக் கற்போர்க்கு இனிது புலப்படும். பிராரத்தமெல்லாம் அனுபவித்தே தீரவேண்டுமாதலால்; இந்தப் பிராரத்தங் காரணமாகக் கிளர்ந்த விருப்பை எமது பெருமானுகிய கடவுள் தமதடியருட் சிறந்த சுந்தரமூர்த்தி நாயனருக்குத் தாமாக எளி வந்து தூது சென்று தீர்த்தருளிய பெருங்கருணைத் திறத்தை நினைக்குந்தோறும் அவருடைய காருண்ணிய சொரூபத்தின் கண் யார் தாம் ஆராமை கொள்ளார்?

இஃதுண்மையே யாயினும், பெண் விருப்புத் தூண்டக் கடவுளைத் தூது செல்லுமாறு ஏவினர் ஒருவர் சிவனடியார் எனப்படுவது எங்ஙனமாம் என்பீராயின், மண், பெண், பொன் எனப்படும் முத்திறப் பொருள்களினும் ஆசை அற்றுச் சிவனடிக்கு ஆட்பட்டோரே சிவனடியார் எனப்படுவர் என்பது சத்தியம். சுந்தரமூர்த்தி நாயனரிடத்து இந்த ஆசை ஆகாமிய வடிவாக விளங்கியதில்லை. அவர் உண்மை அளவில் இந்த மூவகை ஆசைகளையும் முற்றத் துறந்தவர் என்றே சொல்லத்தக்கார். அவரிடத்திலே காணப்பட்டுள ஆசை பிராரத்தமாத்திரையாகவே தோன்றியதாதலின், அந்த ஆசை காரணமாக அவருடைய அடிமைத்திறம் பாதிக்கப்படமாட்டாது. அவர் பெண்ணுசை நீத்த பெருந்தகையார் என்பது, பிராரத்தங் காரணமாக பரவை சங்கிலியார் என்னும் இருவர்மீது மாத்திரமே அவர் ஆசைகொண்டதன்றிப் பிறிதொருவர்பாலும் அவர் சிறிதாவது ஆசைகொள்ளாமை கொண்டு நாம் இனிதறியக் கிடக்கின்றது.

பிராரத்தங் காரணமாகத் தோன்றும் ஆசை குற்றத்தின்பாலதாகாதோ எனின் பிராரத்தமெல்லாம் முன்வினை காரணமாக நிகழ்வன. இவ்வினை காரணமாக நிகழ்வனவற்றுக்கெல்லாம் அந்த வினையே காரணமாவதன்றி ஒருவருடைய சுபாவ நிலை காரணம் என்பது கூடாது. சுபாவ நிலை காரணமாக நிகழ்வன அனைத்தும் ஆகாமியத்தின் பாற்பட்டு, அவைகளே ஆன்மாக்களுடைய பக்குவத்தை நிச்சயித்தற்கு ஏதுவாகும். சுந்தரமூர்த்தி நாயனர் தமது பக்குவத்தளவில் சிவபெருமானுக்கு அடிமைபூண்ட தொண்டர் பெருமான். ஆயினும் அவர் தாமும் பிராரத்தத்தை அனுபவித்தே தீரவேண்டும். இந்தப் பிராரத்தம் பற்றியே அவரிடத்தில் பரவையார்பால் விருப்புத் தோன்றியதன்றி, அவருடைய பக்குவங் காரணமாக அவ்விருப்புத் தோன்றியதல்ல. அவருடைய பக்குவம் சிவபெருமானுடைய அடித் தொண்டுக்கே உரியதொன்றாகலின், அத்தொண்டு பிராரத்த மாத்திரையாற் கிளர்ந்த விருப்புப் பற்றித் தோஷமுமுடைத்தாகாது.

அடியார்களுடைய சரித்திரங்களிலே ஆழ்ந்த தத்துவார்த்தங்கள் அமைந்து கிடத்தலை நுண்ணறிவுகொண்டு ஆராயுமிடத்துப் புலப்படக் காணலாகும். அவற்றை எமது வெள்ளறிவுகொண்டு தோற்ற மாத்திரையால் நிச்சயிப்பது குருடன் பாலுக்கு வடிவங் கற்பித்தவாறன்றிப் பிறிதன்றாம்.

இங்ஙனமே கடவுள் சுந்தரமூர்த்தி நாயனாருக்கு மாத்திரமல்ல, அப்பமூர்த்தி, ஞானசம்பந்தநாதர், மணிவாசகப்பிரபு முதலிய தொண்டர்கள் பலருக்குப் பலமுறையும் எளிவந்து வெளிப்பட்டுத் தண்ணீர்ப் பந்தர் வைத்தும், முத்துப்பல்லாக்கு முதலிய உதவியும், குதிரைச் சேவகனாகியும் பல அற்புத லீலைகளைச் செய்தருளினார். இந்த லீலைகளெல்லாம் அவருடைய பெருங் கருணைத்திறத்தைக் காட்டிநிற்கும் என்க.

---

## நால்வர் முத்தி

### (“ சித்தாந்தம் ”)

இவ்வுலகத்தில் பொய்யமணையடக்கி நமது சைவசமயத்தை நிலைநாட்டியருளிய காழிவேந்தரென்னும் திருஞானசம்பந்த சுவாமிகள், சமணரால் கல்லிற்கட்டிக் கடலிற் போடப்பட்ட அஞ்ஞான்று தாமெப்பொழுதும் ஐந்தெழுத்துப் புணைப்பற்றிக்கிடக்கின்ற உண்மையை உலகமறிவான் வேண்டி நமச்சிவாயத் திருப்பதிகம் பாடியருளிய திருநாவுக்

கரசு சுவாமிகள், முன் கயிலாயத்தில் வாக்கருளியவண்ண மிறைவனால் தடுத்தாட் கொள்ளப்பெற்ற திருநாவலூரரென்னும் சுந்தரமூர்த்தி சுவாமிகள், திருப்பெருந்துறையில் குருந்தினீழலில் அடியார் குழாத் தொடு வீற்றிருந்து ஆகமாந்தமென்னுஞ் சித்தாந்த உண்மைப்பொருள் களை யிறைவனாலுபதேசிக்கப்பெற்ற திருவாதவூரரென்னும் மாணிக்க வாசக சுவாமிகள் என்னுஞ் சமயாசாரியர்களாகிய இவர்கள் யான்கூறிய நால்வராவார்.

இனி முத்தியின் பொதுவியல்பு:— முத்தி, வீடு என்பன ஒரு பொருளன. ஆணவபந்தத்தினின்று விடுத்தலே வீடாம். அநாதியே உயிருடன் சகசமாய்ச் சார்ந்துநின்ற இவ்வாணவ மலத்தின் பலவித சக்திகளை யிறப்பில் தவங்களென்னுஞ் சிவபுண்ணியத்தாற் கெடுத்து இருவினையொப்பு மலபரிபாகம் சத்திநிபாதமெய்திச் சிவஞானத்தாற் சிவப்பேறு ஆன்மா வெய்தும்.

எவ்வாறெனில், காட்டக்காணு மியல்புடைய கண்ணிந்திரியத் துக்கு உயிர் அத்துடனின்று பொருளினைக்காட்டுதல் மாத்திரையே யன்றி, உடன்சென்று அவ்வுருவைக் காணுதலுஞ் செய்து உபகரிக்கு மாறுபோல் உயிர்க்கு முதல்வன் உடனின்றறிவித்தல் மாத்திரையே யன்றி அவ்வுயிருணர்வோடு கூட அத்துவிதமாய்ச் சென்று அவ்விட யத்தை யறிதலுஞ்செய்து உபகரித்துவரும். காயம் ஒழிந்தாற் சுத் தனாதுவோனாகிய ஆன்மா இவ்வித உபகாரத்தை யறியப்பெறின், அம் முதல்வன் திருவடிகளைத் தலைப்படுதற்கண் இச்சையிடையறாது நிகழும். அறிவு இச்சையிரண்டும் ஒத்து அத்துவித நிலையொன்றே பற்றி முதல் வன் திருவடிக்கண்ணவாய் ஒருங்கு நிகழவே காயம் ஒழிந்தபின் மல நீங்கிச் சுத்தனாய் நிற்குமுறைமை காயத்தோடு நிற்புழிக்கைகூடப் பெறு தலால், ஏனைக்கிரியையுமே யெல்லாமலங்களையும் நீத்து அவ்வறிவிச்சை களோடு ஒரு வழிக்கொண்டு செங்கமலத் திருவடியைக் கூடப்பெற்று மாறுபடாத சிவானுபூதியே சுவானுபூதியாகக் கொண்டு வாழ்தல் ஜீவன் முத்தர் நிலையாம். இவர்கள் சிவஞானத்தாற் சிவத்தை நோக்கியன்பு செய்யப் பெற்றுச் சிவமே கண்டுகொண்டிருப்பர். அன்றியும் இவ்வத்து வித முத்திநிலையின் தன்மையை ஆன்றோர்கள் பல செய்யுட்களாற் சுருங்கச் சொல்லல் விளங்கவைத்தலென்னும் அழகொடு கூறுவாரா யினர். உதாரணமாக,

**ஞானசுகாதீத வெண்பா.**

சுத்தனே ஞானச் சுடரே கருணையுறு
நித்தனே நின்னுடனா னிற்பதுரை—பெத்தத்தில்

உன்னறிவி னுனிருந்த வுண்மைபோன் மாணவகா
வென்னறிவி னீயு மிரு.

### சிவபோகசாரம்

இந்தனத்தி லங்கி யெரியுநீர் தேனிரதம்
கந்தமலர்ப் போதுவான் காலொளிகண்—சந்ததமும்
அத்துவித மாவதுபோ லான்மாவு மீசனுமாய்
முத்தியிலே நிற்கு முறை.

இஃதன்றியும் இவ்வத்துவித முத்தியைத் தாடலை யென்னும் வார்த்தையில் டகாரத்தை ஓரெழுத்தென்றுவது ஈரெழுத்தென்றுவது கூறமுடியாமல் ஒன்றுமின்றி இரண்டுமின்றி ஒன்றிரண்டுமின்றி அத்துவிதமாய் நிற்றலையும் உவமையாக எடுத்துக் கூறுவர். மேற்கூறிய முதற்செய்யுளில் உயிரியல்பு சிறிதுந் தோன்றுது, இறைவனது வியாபகத்துள் ஆன்மாவடங்கிநிற்கு முறைமையையும், பின்னைய செய்யுளில் அத்துவிதமாய்நிற்குந் தன்மையையும் மற்றொருவமையில் இருபொருள் புணர்ந்து நிற்குமாற்றையுங் கூறினும். இம்முத்திநிலையில் ஆன்மா மதுவுண்ட வண்டேபோல் நிற்பனென்றும் இறைவன் "கரும்பைத் தேனைப்பாலைக் கனியமுதைக் கண்டைக் கட்டியை யொத்திருப்பனந்த முத்தியினிற் கலந்தே" என்றும், ஆன்றோர்கள் கூறியுள்ளார்கள். இவ்வித அரிய பெரிய முத்தியே சித்தாந்த முத்தியெனப்படும். இம்முத்தி யெய்துதற்கு மேற்கூறப்பட்ட இறப்பில் தவங்களென்னுஞ் சரியை,கிரியை, யோகங்களைச் செய்துழிச் சன்மார்க்கமென்னும் ஞானங் கைகூடும். மேற்கூறிய இறப்பில் தவங்களாகிய சிவபுண்ணியங்கள் பதினறு வகைப்படும். அவை சரியையிற் சரியை, சரியையிற் கிரியை, சரியையில் யோகம், சரியையில் ஞானம், கிரியையிற் சரியை, கிரியையிற் கிரியை, கிரியையில் யோகம், கிரியையில் ஞானம், யோகத்திற் சரியை, யோகத்தில் கிரியை, யோகத்தில் யோகம், யோகத்தில் ஞானம், ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்பன.

இச்சிவபுண்ணியங்கள் உபாயமென்றும் உண்மை யென்றும் இருவகைப்பட்டு நின்று, உபாயம் புகழையும் உண்மை பத்தியையும்பற்றி நிகழும். இவற்றுள் உபாயம் ஒவ்வொன்று நந் நான்காகி முன்னையதுடன் சேர்த்து (32) ஆக்குவர். உபாயச்சரியையிற் சரியை முதல் 16-வகைச் சிவபுண்ணியங்களுக்கும் காலாக்கினி ருத்திரர் புவன முதல் குணதத்துவ மஸ்தகத்தில் ஸ்ரீ கண்ட புவனத்தின் கீழுள்ள ருத்திரர்

ஞன ஆவ்வப்புவனபதிகளுலகத்தில் சாலோக சாமீப சாரூப சாயுச்சியங்களைப் பெறுதலே பயனும், உண்மையிற் சரியையிற் சரியை முதல் யோகத்தில் ஞானம் வரை (12) வகை சிவபுண்ணியங்களுக்கு ஸ்ரீ கண்டபுவன முதல் சுத்த வித்தைக்குக் கீழுள்ள அவ்வப்புவனபதிகளுடைய சாலோக முதலிய பதமுத்திகளைப் பெறுதலும் பயனும். உண்மையில் ஞானத்திற் சரியை முதல் மூவகைச் சிவபுண்ணியங்களுக்குச் சுத்த வித்தை முதலிய அதிகாரதத்துவம் போக தத்துவங்களில் வைகும் மந்திரர் மந்திர மஹேசர் முதலியோர் புவனத்துச் சாலோக முதலிய முத்தியைப் பெறுதலாம். எஞ்சி நின்ற ஞானத்தில் ஞானம் ஒன்றுக்கே பரமுத்தி சித்திக்கும். ஏனையவற்றிற்கு லயதத்துவ அபர முத்தி கிட்டும். பதமுத்திகட்கு மீட்சியுண்டு. ஆனல் சுத்த வித்தை முதலிய தத்துவ புவனங்களி லெய்தினோர்க்குப் பரமுத்தி தலைப்படுமேயன்றி மீட்சியில்லையாம். இனி அவ்வச் சரியைக்கேற்ப அவ்வப் புவனபதி யுலகங்களிலெய்தி அகத்தொண்டர்போலத் தடையின்றி யியங்கிப் போகங்களை நுகர்வது சாலோகபதவி. இச்சரியை தாச மார்க்கமெனவும் படும். அவ்வக்கிரியைக்கேற்ப அவ்வப்புவனபதிகளி லெய்தி மைந்தர்போல அணுக்கராய் வைகிப் போக நுகர்வது சாமீபம். இக்கிரியை புத்திரமார்க்கமெனவும் படும். அவ்வவ்யோகத்திற்கேற்ப அவ்வப்புவனபதி யுலகங்களிற் சென்று புவனபதிகளோடொத்த வடிவும் அணியும் போகநுகர்ச்சியும் பெற்றுத் தோழர்போ லுரிமைகொண்டு வாழ்வது சாரூபம். இவ்யோகமார்க்கம் சகமார்க்கமெனப்படும். மேற்கூறிய சரியை முதலியவற்றிற்குரிய சாலோக முதலியன அவாந்தரப் பயன்களாம். ஞானமொன்றுமே அவற்றினுண்மைப் பயனும். இந்த ஞானத்தாலேயே சாயுச்சியம் வந்தெய்தும். இதுகாறும் கூறியவற்றால் இறப்பில் தவமினையவென்பதும் அவற்றாலெய்தும் பயன் இனையவென்பதும் முத்திநிலை யின்னதென்பதும் விளங்குமாறு ஒருவாறு சுருக்கிக் கூறினும். இனி நால்வர் முத்திப் பேற்றைக் கூறுவாம். அங்ஙனங் கூறுதற்குமுன் ஞானத்திற் சரியை, ஞானத்திற் கிரியை, ஞானத்தில் யோகம், ஞானத்தில் ஞானம் என்னும் நான்கு படிகளையும் விளக்கி மேற்செல்வாம்.

(1) ஞானத்திற் சரியை சூக்குமவுடலின் தன்மையும் அவ்வுடலின் கண்புசித்த புசிப்பும் கண்டு பின் தூலத்திற் கூடின முறைமையினின்று (36) தத்துவமும் சுத்தமாகிறதாகக் கண்டு நிற்றலாம். (2) ஞானத்திற் கிரியை ஞானபூஜை செய்தலாம். (3) ஞானத்தில் யோகம் பஞ்சாக்ஷரம் அடைவிலோதுதலாம். ஞானத்தில் ஞானம் பஞ்சபூதப் பழிப்பு

முதல் பரமானந்த வசம் வரை முப்பது அவசரங்களிலும் நின்று சிவ ஞானத்து எழுந்ததலாம். இனி இந்நால்வகைப் படியினுள் நால்வர்களில் ஒவ்வொருவரும் எவ்வப் படிகளினின்று எவ்வகை முத்தியெய்தினர் என்பதைப்பற்றி யாராய்வாம். திருத்தொண்டர் புராணமென்னும் பெரிய புராணத்தை யருளிச்செய்த சேக்கிழார் பெருமான் திருவருள் பெற்று எல்லாம் வல்ல இறைவன் உலகெலாமென்று முதலெடுத்துக் கொடுக்க அங்ஙனந் தொண்டர்புராணம் அருளிய விஷயம் உலகெலா மறிந்தவொன்றே. அவர் வாக்கினலருள்வதெல்லா மிறைவனு லருளிய தற்கொப்பாமேயன்றி வேறன்று. ஏனெனில் அவனருள் பெற்றவர் அவன் வசநின்று மொழிகுவராதலின் அவ்வாறு நம் சேக்கிழார் பெருமான் மூவர் தம் முத்தியைக் கூறியாங்குக் கூறுவதே மிகச் சால் புடைத்து. அவ்வாறன்றித் தத்தங்கொள்கை வெவ்வேறிருந்து மனம் போனவண்ணம் அஃதிப்படித்தா னிருத்தல்வேண்டும் இஃதிப்படித் தான் முடிந்திருத்தல் வேண்டுமென்னுஞ் செருக்குடன் கூறுவார் கூற்றெல்லாம் ஜீவபோத நிலையேயன்றிச் சிவபோத நெறியின் கண்ணதன்று. சிற்றறிவுஞ் சிறு தொழிலுமுள்ள இவர்கள் கூற்றைக் கொள்ளவா? அல்லது பேரறிவு பெற்ற பெருந்திருவாளர் கூற்றைக் கொள்ளவா? யாதோரையமுமின்றிப் பின்னையர் சார்பிலேயே சார்ந்து அவர் கூற்றையே கொள்ளல் வேண்டும். இவ்வகையாராய்ச்சியாற் போந்தது யாதெனின் அருண் மொழி மழை பொழிதேவர் கூற்றையே கொள்ளத் தக்கது. மற்றையர் கூற்றுத் தள்ளத்தக்கது. இது நிற்க.

## திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார் முத்திநிலையை ஆராய்வாம்

கவுணியர்கோனாகிய நமது ஆளுடைய பிள்ளையார் கலியாணப் பந்தரில் தமது தேவியைக் கைப்பிடித்த அப்பொழுது (மந்திர மறையாலுய்த்த எரிவலமாக) இந்த இல்லறவொழுக்கம் வந்து தமியேனைச் சூழ்ந்ததே யென்று வெறுத்து, இத்தேவியாரோடு எழுவாயுமீறு மில்லாச் சிவனருள் சேர்வனென்னும் ஆசையானது மீதூரத் தொண்டருறவினர் குழாம் புடைசூழ அளவற்ற மெய்ஞ்ஞானத்தின் எல்லையை யடையுங் குறிப்பால் உலகத்தின் கண்ணுள்ள எவ்வகைச் சார்பும் தன்னை வந்து சாராதபடி நீங்கிச் சிவனோடிரண்டறக் கலத்தல் வேண்டித் திருக்கோயிலை நோக்கிப் போந்தனர். திருப் பெருமணமென்னும் அக் கோயிலினுள் போந்த திருஞானசம்பந்தர் தலைப்படுஞ் சார்பு நோக்கி அவர் தமக்கு முன்னாள் ஞானப்பாலூட்டி யாண்ட அப்பண்பின் பயன் கூட நல்லுணர்வு நல்க " கல்லூர்ப்பெருமணம் " என்றெடுத்துத் திருப்

பதிகம் தீதறு பிறவிப் பாசந்தீர்த்தல் செம்பொருளாக் கொண்டு நாதனே நல்லூர்மேவும் பெருமண நம்பனேயுன, பாதமெய்ந்நீழல் சேரும்பருவமீதென்று பாடத் தேவர்கள் தேவனாகிய சிவபெருமான் திருவருள் புரிந்து முழுச்சுடர்த்தாணுவாகி நீயும் உன் தேவியும் உன் மணத்தில் வந்தார் யாவரும் இச்சோதியுள் வந்தெய்துக என்று அருள் புரிந்து அச்சோதியுள் ஒரு வாயிலை வகுத்துக் காட்ட அப்புகலிப்பிரானும் நமச்சிவாயத் திருப்பதிகம் பாடி ஞான மெய்ந்நெறிதான் யார்க்கும் அச்சொல்லே யென்று வற்புறுத்திக் கூறி யீனமாம் பிறவிதீர மணத்தில் வந்தார் யாவரும் அச்சோதியுட் புகுகவென்னப் புகுந்த பின்னர் காதலியைக் கைப்பற்றிக் கொண்டு வலஞ்செய்தருளித் தீதகற்ற வந்தருளுந் திருஞான சம்பந்தர், நாதனெழில் வளர்சோதிநண்ணியதனுட்புகுவார் போத நிலை முடிந்த வழியெனக் கூறமாற்றால், போத நிலைகள் பலவுளவென்று மவற்றினு ளெல்லாஞ் சென்று சென்று கீழுள்ளனவற்றைக் கழித்து மேல் நிலையெய்தி முடிந்த பின்னர், சிவத்தினுட்புகுந்து இரண்டறக் கலந்து அத்துவிதமாய் நிற்பார் என்னுங் கருத்துத் தோன்றப் புக்கு ஒன்றி உடனானார் என்று பொருளாற்றலைச் சொல்லாற்றலி லமைத்து அருளிச் செய்வா ராயினர். ஆகவே நாதனெழில் வளர்சோதி நண்ணிய அக்காலத்தும் ஆன்மபோத நிலைகள் உண்டென்றும் அந்நிலைகள் யாவும் முடிந்த வழியே அத்துவிதப்பேறென்றுங் கண்டாம். அவ்வான்மபோத நிலைகளில் சிற்சில கூறுவாம்.

சிவத்தினுள் ஆன்மா அடங்குதற்குற்றபோது போதங்கொள்ளுதல் ஒரு நிலை. இதற்கு இரும்பையுங் காந்தத்தையு முவமை கூறுவர். பின் ஆன்மபோதத்தை அடக்கல் இரண்டாவது நிலை, இதற்கு ரச குளிகையையும் பொன்னையுமுவமை கூறுவர். போத வடிவை மறைத்தல் மூன்றாவது நிலை, இதற்கு உப்பையும் நீரையும் உவமை கூறுவர். ஆன்மபோதத்தைக் கெடுத்துச் சிவபோதமாக்குதல் நாலாவது நிலை, இதற்கு அளத்தையுந் துரும்பையு முவமை கூறுவர். ஆன்மபோத மேலிடாது வைத்தல் ஐந்தாவது நிலை; இதற்கு அக்கினியின் ஒளியையும் சூரியனது ஒளியையும் உவமை கூறுவர். ஆன்மபோதத்தைத் தன் வசமாக்கிக் கலத்தல் ஆறாவது நிலை, இதற்குக் கண்ணொளியையுங் கதிரொளியையு முவமை கூறுவர். இவ்வாறு சிவபோதம் ஆன்மபோதத்தை யடக்கி நின்று தான் மேலிட்டுத் தன்னுருவப் பரப்பையெல்லாங் கொடு புகுந்து இவன்பாலே பதியும். இதுகாறும் போந்த நிலைகளையும் அஃது முடிந்த வழிப்புக் கொன்றுதலையும் ஒருவாறு சுருங்கக் கூறினும். ஆதலால் அச்சோதியிற் புகுந்த காலத்தும் இப்

போத நிலையெல்லாம் முடிந்து அத்துவித மெய்தினரென்பது பெறற்றும். நமது சுவாமி வடிவொடு சோதியுட் புகுந்தனராதலின் இவர் ஞானத்தில் யோக நிலையில் நின்றவரென்று கொள்ளல் வேண்டும். ஆனல் ஈண்டு அந்நிலை புக்க பின்னரே உடனுறைரென்பது தெளிய நின்றமை காண்க. ஞானத்தில் யோகத்திற் கிலக்கணம் பஞ்சாக்ஷரத்தை அடைவிலோதுதலென்று கூறினும். அது பற்றி யன்றே நமது சுவாமிகள் வானமு நிலனுங் கேட்க நமச்சிவாயத் திருப்பதிகத்தை அருள் செய்தனர். "மெய்ப்பொருளாவது நாதனும நமச்சிவாயவே" என்பது தெளிதல். இத்தெளிதலே ஞானயோகக் குறியாம்.

## திருநாவுக்கரசு நாயனுர்

இனி ஆளுடையரசின் முத்திநிலை கூறுவாம். சேக்கிழார் பெருமான் கூறியருளிய வண்ணம் இந்நாயனுர் கடைசியாகச் சென்றிருந்த தலம் திருப்புகலூராம். அத்தலத்திற்கு ளிவர் முத்தியெய்தினர். அத்தலத்திற் சென்றிருந்த காலத்தும் உழவாரத் திருப்பணியே செய்ததாக விளங்கக் கிடக்கிறது. இந்நாயனுர் உழவாரத்திருப்பணியை மிக முக்கியமாகச் செய்தவரானதினல் அதனையே அடிக்கடி வியந்து கூறுவாராயினர். ஆனல் மனமொழி மெய்களென்னு மூன்று வழியாலும் திருப்பணி செய்வதில் பின்னிட்டவரல்லர். அஃது அடியிற் கூறப்படும் தொண்டர் புராணச் செய்யுளால் நன்கு விளங்கும்.

"மையற்றுறை யேறி மகிழ்ந்தலர்சீர் வாகீசர் மனத்தொடு வாய்மையுடன்
மெய்யுற்ற திருப்பணி செய்வாராய் விரவுஞ்சிவ சின்னம் விளங்கிடவே
யெய்துற்ற தியானமறு வுணர்வு மீறின்றி யெழுந்திரு வாசகமும்
கையிற்றிக ழும்முழை வாரமுடன் கைத்தொண்டு கலந்து கசிந்தனரே."

இந்நாயனுர் அதிதீவிரபக்குவ விசேடத்தால் சகள நிட்களமாகிய சூக்கும வடிவதனை யுள்ளும் புறம்பும் விதித்தவாறே வழிபட்டனரென்பது பெற்றும். அங்ஙனம் வழிபடுதலையே கிரியையாகக் கூறல் சாலும். இனிச் சிவஞான பாஷ்யத்தில் கூறியாங்கு ஞானத்திற் கிரியை சிந்தித்தலாம். மஹா ஞானிகளும் ஞானத்தை யடைந்த போதிலும் மற்றைய ருய்யும் வண்ணம் கீழுள்ள தொண்டுகளையும் ஞானி நாவினுக்கு முரியனென்றருளிய வண்ணம் செய்யா தொழியார். அன்றியும் அன்புருவாகிய இந்நாயனுர் இறைவனது மெய்யருள் தானெய்த வருமந்நிலைமை யணித்தாகச் சிலநாள் திருப்புகலூரில் அமர்ந்திருந்தார். அப்பொழுது, "தன்னுடைய சரணுன தமியேனைப்புகலூரன், என்னை யினிச் சேவடிக்கீழிருத்திடு மென்றெழுகின்ற, முன்னுணர்வின் முயற்

சியினற் றிருவிருத்தம் பல மொழிந்தார்" அன்றியும் புகலூரிலெழுந் தருளியிருக்குஞ் சிவபிரானை நோக்கிப் "புண்ணியாவுன்னடிக்கே போது கின்றேன்" என்னுந் திருத்தாண்டகத்தைக் கூறியருளினர். அத் தாண்டகத்தில் முதற் பாசுரத்தால் "எண்ணுகேன் என் சொல்லி யெண்ணுகேனோ வெம்பெருமான் றிருவடியே யெண்ணினல்லால்" என்றருளிச் செய்திருப்பதால் ஞானத்திற்கிரியை சிந்தித்தலென்பது நன்கு நாட்டப்பட்டது. அன்றியுமிதனை யாதரித்துச் சேக்கிழார் பெரு மானும் மன்னிய வந்தக்கரணம் மருவுதலைப்பாட்டினல் என்றருளிச் செய்வாராயினர். இனி முத்திநிலை கூறுமிடத்து "நண்ணரிய சிவானந்த ஞானவடிவேயாகி, யண்ணலார் சேவடிக்கீழாண்டவர செய்தினர்" என்னுஞ் செய்யுளில் சிவானந்த வடிவேயாகி யென்று கூறுமமற் சிவா னந்த வடிவாகி யென்று கூறப்பட்டுளது. ஞானமென்பது ஈண்டு இறைவனது ஞானசத்தி. சிவானந்த ஞானமென்பது இறைவனது இன்பசத்தி. இது இறைவன் மாட்டு நின்று வரும் சுகப்பிரபையாம். அது துகளறு போதம் "மாமணியிற் சோதி மலர்ந்த பிரபைபோல் ஆமரன்றன்பாலேபது." இது சுகரூபமென்னுந் தலைப்பின்கீழ் வரு கின்றது. ஆதலினற்றான் சிவானந்த ஞானவடிவெனக் கூறப்பட்டது. அதற்குமேல் சுகப்பேறு அல்லது சிவப்பேறு முதலிய பலநுணுகிய நிலைகளுமுள்ளன. அவை இடையீடின்றி ஒன்றின்பின்னென்றாய் நிக ழும். இதுகாறுங் கூறியவாற்றால் இன்னுயனு ரடைந்த முத்தி சிவானந்த ஞானவடிவேயாம் என்பது பெற்றாம்.

## சுந்தரமூர்த்தி நாயனர்

இந்நாயனர் திருக்கைலாயத்தில் வள்ளல் சாத்து மதுமலர் மாலை யும் அள்ளு நீறு மெடுத்தணைவார். அவர் பெயர் ஆலாலசுந்தரர். முதல் வன்றனக்கு மலர் கொய்திட நந்தவனச் சூழலிலே சென்றபோது அநிந் திதை கமலினியென்னு மிருசேடியர் மாட்டு இச்சை வைப்பாராயினர். அஃதறிந்த இறைவனும் தென்புவிமீது தோன்றி அம்மெல்லியலாரு டன் இன்பநுகர்வாயென ஆலாலசுந்தரரும் அஞ்சலியஸ்தராய் உனது திருவடியை நீங்குஞ் சிறுமையேன் மையல்மானுட யாக்கையால் மயங் கும் வழி ஐயனே தடுத்தாண்டருள் செய்யென அங்ஙனம் இறைவர் அருள் செய்வாராயினர். இவர் அவ்விச்சையை நிறைவேற்றுதற்கு மாத்திரம் இவ்வுலகத்திற்கு வந்தவரேயன்றி வேறன்று. அவர் முன் னிருந்தவிடம் சுத்த சாலோகமென்னும் சிவசாலோகமாம். இங்குப் போகத்தி லிச்சையுடையரேல் பிறவிக்கு வரவேண்டுவதும், ஆசையில்

ரேல் மேலான நிலைகளையடைய வேண்டுவதும் என்பது மிகக் கவனிக்கத்தக்கது. ஆனால் இந்நாயனார் மீண்டுங் கைலாயமெய்தி ஆலாலசுந்தரராய்ச் சிவகணநாதர்க்குத் தலைவராய் நின்றனர். அங்ஙனம் நின்று முன்னை நல்வினைத் தொழிலியற்றவராயினர் என்று பெரிய புராணங் கூறுமாற்றால் இவர் மீண்டுஞ் சிவசாலோகத்தை யடைந்தன ரென்பது பெற்றாம். ஆனால் இவர் மானுட யாக்கையோடு கைலாயத்திற் குப் போனதாகவில்லை. ஏனெனில் "அங்கணோரொளியாயிர ஞாயிறு, பொங்கு பேரொளி போன்று முன்றோன்றிடத், துங்கமாதவர் சூழ்ந் திருந்தாரெலா, மிங்கிதென்கொலதி சயமென்றலும்."

"அந்தி வான்மதி சூடிய வண்ணல்தாள்
சிந்தியாவுணர்ந் தம்முனி தென்றிசை
வந்த நாவலர் கோன்புகழ் வன்றொண்டன்
எந்தை யாரரு ளாலணை வானென."

உபமந்நியுபகவான் கூறுமாற்றானுணர்க. இதனை, "ஊனுயிர் வேறு செய்தான் நொடித்தான்மலை யுத்தமனே" என்ற தேவாரமு மாதரிக் கின்றது. ஈண்டு ஊனை வேறு செய்தலாவது பூதசரீரம் விட்டுத் திவ்ய தேஜஸோடு கூடிய சுத்த சரீரம் பெறுதல். உயிர்வேறு செய்த லாவது, மானுட யாக்கையின் மபக்கம் விட்டுச் சிவபோத மேலிடல். சிவசாலோகத்துக்குமேல் வேறு சாலோகங் கிடையாதாதலால் இவர் மேலான சாலோக நிலையை யடைந்தனர் என்பதாயிற்று. அந்நிலையி னின்றும் மேலான நிலைகளையடைதல் சாலும். இதுகாறுங் கூறிய வாற்றால் சுத்த சாலோக நிலை இந்நாயனாரடைந்தன ரென்பது பெற்றாம். இதுவே ஞானத்திற் சரியையாம். இது கேட்டலென்னும் ஞான பூசையுள் அடங்கும். இதனை ஐயனே தடுத்தாண்டருள் செய்யெனக் கேட்டமையா லுணர்க.

## திருவாதவூரடிகள்

இச்சுவாமிகளை நோக்கித் தில்லைவா ழந்தணர்கள், "தில்லையிலெம் பெருமானைச் செப்பியவித்தமிழ் மாலை, நல்லவரும் பொருள் கூற வேண்டுமென நவின்றார்கள்." உடனே சுவாமிகளும் கனக சபைக் கெதிரேபோய் இதற்குப்பொருள் சொல்வேன் என்று சொல்ல யாவரும் பின் சென்றார்கள். "ஓன்றிய வித்தமிழ்மாலைப் பொருள் இச்சபா நாயகரே யென்றுரை செய்து, மன்றதனிற் கடிதேகி மறைந்தன"ரென்று வாதவூரர் புராணமும், "ஈசனதடிக்கீழெய்தி வீறிலாவறிவானந்த, தேசொடு கலந்து நின்றா" ரென்று திருவிளையாடற் புராணமுங் கூறும்.

ஈண்டுச் சிவஞானத்தையே ஈசனதடியென்று கூறப்பட்டது. சிவ ஞானத்தை யெய்திய பின்னர் அதனுள் உள்ளொளியாயும் அந்தமாதிக ளில்லாததாயும், பேரறிவோடுகூடிய ஆனந்த மயமாயுமுள்ள தேசொடு கலந்து நின்றாரென்பதால், இவரெய்திய முத்திஞானத்தில் ஞானத் தானுறும் பரமுத்தியேயாம்.

துகளறு போதம், "உற்ற பரமானந்தத் தொன்றா யதிலுறங்கி போதம் முற்றவதே முத்திமுடிவென் றுரைக்கு" மென்று கூறியிருத் தலால் இவரெய்தியமுத்தி முடிந்த முத்தியாம். இவரடைந்த பேற் றிற்கு மேலடைவதோர் பேறில்லை. அத்துவித முத்தியிதுவேயாம். இந்நிலையை யாருமறிதற் கரிதாம். மெய்ஞ்ஞான விளக்கத்தில், "அறி யார்களுமறியார் மிக வறிவார்களுமறியார், அறியார்களு மறிவார்களு மொன்றேதமிலன்றா, மறியார்களும் பசுபாசமென்னிருளான் மறைந்தறி யார், அறிவார்களும் பரமானந்த வொளியானிறைந்தறியார்" சுவாமிகள் பத்தியினால் மறவாதேத்தலாகிய சதாநிஷ்டையினால் இறைவனது சீபா தத்தை யடைந்தவரெனக் கொள்க. அது,

"முத்திநெறி யறியாத மூர்க்கரொடு முயல்வேனைப்
பத்திநெறியறிவித்துப் பழவினைகள் பாறும் வண்ணம்
சித்தமல மறுவித்துச் சிவமாக்கி யெனையாண்ட
அத்தனெனக் கருளியவா றார்பெறுவா ரச்சோவே."

இந்நிஷ்டையே ஞானத்தில் ஞானம்.

இதுகாறுங் கூறியவாற்றால் சுந்தரமூர்த்தி சுவாமிகள் ஞானத்திற் சரியையில் நின்றுழிச் சுத்தசாலோக பதவியும், திருநாவுக்கரசு சுவாமி கள் சுகரூபமென்கின்ற நிலையையும், திருஞானசம்பந்த சுவாமிகள் மேற்கூறியாங்குப் பலவித போத நிலைகள் முடிந்தவிடத்துப் புக்கு ஒன்றி அத்துவித நிலை யெய்தினாரென்பதையும், மாணிக்கவாசக சுவாமி கள் அறிவானந்த தேசொடு கலத்தலாகிய பரமுத்தியெய்தினாரென் பதையும் வெள்ளிடை மலைபோல் விளங்கக்கண்டாம். இவ்வாறு சொல் லியதெல்லாம் இறைவனார் திருவருள்பெற்ற ஆன்றோர் வாக்கியங்களை வைத்தே ஒருவாறு விளக்கிக் கூறினேனேயன்றி வேறன்று. இவ்விளக் கத்திற்கு மறுதலையான அபிப்பிராயமுடையார் சிலர் இருக்கினுமிருக் கலாம். அவர்கள் உண்மையீதெனவிறவரேல், அதுசுருதியுத்தி யனு பவத்துக்கு ஒத்ததாயிருப்பின் அங்கீகாரஞ் செய்து அவர்களுக்கு வந் தனமளிக்கக் கடமைப்பட்டுள்ளேன்.

S. பால்வண்ண முதலியார்.

# சைவர்கள் வணங்குந் தெய்வம்

(192-வது பக்கத் தொடர்ச்சி)

உருத்திரர் பசுவர்க்கத்துள் எண்ணப்படுபவரல்லர். பாசமுடைய வரே பசு என்னப்படுவராதலால், பாச நீங்கிப் படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் முத்தொழில் செய்யும் அதிகாரம் பெற்றுச் சிவ சத்தியினால் அதிட்டிக்கப்படுபவராய்ச் சிவனுக்குரிய மான், மழு, சதுர்ப் புஜம், காளகண்டம், திரிநேத்திரங்கள் பெற்றவராய்ச் சிவ சொரூபியாய் விளங்குதலின், உருத்திரனைப் பதிவர்க்கத்துள் வைத்து எண்ணுதல் சைவசமயக் கொள்கையாம். இருமலமுடைய பிரளயாகலருள் அம்மல நீங்கிப் பக்குவராயினோர் சிருட்டியாரம்பத்திலே இவ்வுருத்திர பதம் பெறுவரென்பதும், பசு வியல்பு நீங்கிப் பதியின் சத்தியினால் அதிட் டிக்கப்பட்டுப் பதியாய் விளங்குவரென்பதும் மிருகேந்திர முதலிய ஆகமங்களில் விரித்துரைக்கப்படுகின்றது. மும்மூர்த்திகளுள் ஒருவ ராய் வைத்து எண்ணப்படுவோர் குணதத்துவ நிலையராய் உள்ள குணி ருத்திரராம். இவரோடு சேர்த்து கக௮-உருத்திரர் கக௮-புவனங்களுக் குக் கர்த்தாக்களாயிருப்பர். நூற்றுப் பதினெட்டு உருத்திரருள்ளுந் தலைவராயிருப்போர் குணிருத்திர ரெனப்படும் ஸ்ரீகண்டருத்திரராம். இந்த ஸ்ரீகண்டருத்திரர் பிரம விட்டுணுக்கள் முதற் பிபிலிகாந்தமா யுள்ள சகல சீவராசிகளையும் பிரகிருதியின் காரியமான பிரபஞ்சங்களில் வைத்து வாங்கி ஐந்தொழில் செய்து அவரவர் கன்மங்களுக்கேற்ற பலன்களைக் கொடுப்பர். சகல வர்க்கத்துட்பட்ட எல்லா உயிர்கட்கும் கர்த்தாவாயிருப்பவர் அவரேயாம். ஆயினும் அவரை நடத்துவது சிவ சத்தியாதலால், எல்லா முதன்மையும் அச்சத்திமானாகிய சிவனுக்கே யுண்டென்றுணரவேண்டும்.

இந்த மும்மூர்த்திகளுக்கும் மேற்பட்ட வடிவம் மகேசுர வடிவம். அதற்கு மேற்பட்டது சதாசிவ வடிவம். இந்த வடிவங்களையும் சிவ சத்தியே அதிட்டித்து நிற்கும்.

இவை யெல்லாவற்றுக்கும் மேலாயுள்ளதும் ஊரும் பேரும் உரு வும் இல்லாததும் ஞானானந்த வஸ்துவாயுள்ளதும் சகல சராசரங்களை யும் தனது சத்தியால் இயக்குவதும் அங்ஙனம் இயக்கினும் தான் ஒன்றினுந் தோயாது நிற்பதும் எதுவோ அதுவே சிவமாம். அந்தச் சிவம் ஒன்றேயாம். அதற்கு ஒத்ததும் மிக்கதுமான பொருள் வேறில்லை. அதனையே சைவர்கள் யாவருந் வணங்குவர். அதன் வணக் கமே முத்திக்குச் சாதனமாம்.

அரசனேயன்றி அரசனுடைய ஆணையைத் தாங்கி உலகம்புரக்கும் மந்திரி பிரதானி முதலாயினாரும் அரசமரியாதை பெறுதற்கும் உலகத் தாரால் ஏத்தப்படுதற்கும் உரியராயிருத்தல் போல, முழுமுதற் பொரு ளாகிய சிவம் மாத்திரமன்றி அச்சிவத்தின் சத்தியினால் நடத்தப்படும் கர்த்தாக்களும் அச்சத்தியுடைமை காரணமாக வணங்கப்படுவதற்கு உரியவரேயாவர். மகேசுர சதாசிவ வடிவங்கள் சிவம் நேரிற் கொண்ட

வடிவங்களாதலால், சிவமாகவே வணங்கப்படல் வேண்டும். உருத்திர வடிவம் சிவசத்தியினால் அதிட்டிக்கப்படுதலும் சிவனுக்கு உரிய வடிவங்கள் அமையப் பெற்றதுமாயிருத்தலால், சிவமென்றே பாவித்து வணங்கப்படல் வேண்டும். பிரம விட்டுணுக்களும் சிவசத்தியினால் அதிட்டிக்கப்பட்டுச் சிவனுக்குரிய படைத்தல் காத்தல்களைச் செய்தலால் சிவபேதத்துள் வைத்து வணங்கப்படலாம்.

இன்னும் சிவபேத வடிவங்கள் அணுபட்ச சம்புபட்ச வேறுபாட்டால் இருவகைப்படும். அணுபட்சமே சிவசத்தியின் அதிட்டானத்துக்கு உரியனவாய் இங்கே சொல்லப்பட்ட இயல்புகள் பெற்று விளங்கும் மூர்த்திகளாம். இதன் மேலும் சம்புபட்சமென ஓர் நிலையுண்டு. அச்சம்புபட்சத்தினும் அணுபட்சம் போலப் பிரம விட்டுணு உருத்திர மகேசுர சதாசிவாதி பேதங்கள் உள்ளன. அவை பூசை தியானாதிகளின் பொருட்டுக் கற்பிதமாகவும், அணுபட்ச மூர்த்திகளை அதிட்டிக்கும் சிவசத்தியாற் கொள்ளப்படும் சத்திகாரிய சிற்கன மேனிகளாயுமிருக்கும். அவை யாவும் சிவ வடிவங்களேயாதலால், அவை சைவர்களது வழிபாட்டுக்கு என்றும் உரியனவேயாம்.

அடியார்களுக்கு அநுக்கிரகஞ் செய்யும் முறை பற்றியும் ஐந்தொழில் செய்யும் வேறுபாடு பற்றியும் அணுபட்ச சம்புபட்ச மூர்த்திகளுள் அவ்வப்பொழுது கொள்ளப்பட்ட வெவ்வேறு வடிவங்களும் உள. அவை இருபத்தைந்து கேவல மூர்த்தங்களாகவும் அவற்றினின்றும் விரிந்த வேறு பல வடிவங்களாகவும் விளங்கும். அவையெல்லாம் சிவபேத வடிவங்களே யாதலின், வழிபடற்குரியனவேயாம்.

இனி முழுமுதற் பொருளாகிய சிவத்தை நேரே ஞானானந்த வடிவினதாக வழிபடுதலிலும், சிவசத்தி நேரிற் கொண்டதும் அதிட்டானமாகக் கொண்டதுமான மூர்த்திகளை வழிபடுதலிலும் பயன் வேறுபாடு மிகவுண்டு. சிவத்தை நேரே வழிபடுதலால் எய்தும் முத்தி பரமுத்தியாம். சத்திகாரிய வடிவங்களை வழிபடுதலால் எய்தும் முத்தி அபர முத்தியாம். அதிட்டான வடிவங்களுள் சிவபேதமான பதிவர்க்கத்தை வழிபடுதலால் எய்தும் முத்தி பதமுத்தியாம். சகலவர்க்கத்துட்பட்ட விட்டுணுவை வழிபடுதலால் எய்துவது புத்தியென்னும் போகத்துட்பட்ட வைகுந்த பதமாம். பிரமாவின் வணக்கத்தால் எய்துவது பிரமலோக வாழ்வாம். இங்ஙனம் அவையெல்லாம் பயன்றரு முறையால் அநேகவிதமாம்.

அவ்வவர் புண்ணியப் பேற்றுக்கும் பக்குவ நிலைக்கும் ஏற்பவே வழிபாடும் பயனும் அமைந்திருக்கும். சிவமாகிய பதிப்பொருளே இங்ஙனம் உயிர்களைச் சோபான முறையாய் நிறுத்தி அநுக்கிரகித்து ஈற்றில் உண்மை நெறியாகிய சைவ சித்தாந்த ஞான நெறியில் வைத்து முத்தியடைவிக்கும். அதனால் எல்லா வழிபாடுகளும் வேண்டப்படுவனவேயாம். அவை அவ்வவர் புண்ணியத்துக்கும் பக்குவத்துக்கும் ஏற்றவாறிருக்கும். ஆயினும் முதிர்ந்த பரிபாகி சிவவழிபாடு ஒன்றற்கே யுரியவனாவன். அதுவே சைவ சித்தாந்த மெய் வழிபாடாம். சிவமொன்றே அச்சைவர்கள் வணங்குந்தெய்வமாம்.

# பிரமாண விளக்கம்

## "ஞானசித்தி"

பக்கம், சபக்கம், விபக்கம் என்னும் மூன்றனுள்ளே, சந்தேகித்துத் துணியற்பாலதாய பொருள் இருக்குமிடம் பக்கமாம். அதற்கு எடுத்துக் காட்டப்படுவதாய்த் துணியப்பட்ட பொருள் இருக்குமிடம் சபக்கமெனப்படும். அப்பொருள் இல்லாதவிடம் விபக்கமெனப்படும்.

இம்மலை தீயுடைத்து, புகையுடைமையால், அடுக்களைபோல என்னும் அநுமானத்தின் கண், துணியற்பாலதாய பொருள் தீ. அத்தீயிருக்குமிடம் மலை. அதுவே பக்கமாம். இம்மலைக்கு உதாரணமாக எடுத்துக் காட்டப்படுவது அடுக்களை. அதில் துணியப்பட்ட பொருளாகிய தீ இருக்கின்றது. ஆதலால், அது சபக்கமெனப்படும். அப்பொருள் சென்றடையாத இடம் மடு. அது விபக்கமெனப்படும். பக்கம் சபக்கம் இரண்டும் பொருள் உண்டென அறிதற்கிடமாம். விபக்கம் பொருள் இல்லையென்று அறிதற்கு இடமாம்.

இனி இயல்பேது காரியவேது அநுபலத்திபேது என்னும் ஏது மூன்றனுள், மா முதலிய சொற்கள் மர முதலிய பொருளை உணர்த்துதலில் வேறு காரணமின்றி அச்சொற்களில் இயல்பாயுள்ளதாகிய ஆற்றல் இயல்பேதுவென்று சொல்லப்படும். புகை முதலிய காரியங்கள் நெருப்பு முதலிய தத்தங் காரணங்களை உணர்த்துதலில் அவை காரியவேதுவெனப்படும். குளிரில்லாமை முதலிய காரிய இன்மைகள் பனியில்லாமை முதலிய காரண இன்மைகளை உணர்த்துதலினும், பனியில்லாமை முதலிய காரண இன்மைகள் குளிரில்லாமை முதலிய காரிய இன்மைகளை உணர்த்துதலினும் அவை அநுபலத்திபேதுவென்று சொல்லப்படும்.

இனி பிறர் பொருட்டநுமானத்தில் எடுத்துக்கொண்ட அந்நுவயச் சொல் ,வெதிரேகச் சொல் என்னும் இரண்டனுள் "புகையுள்ளவிடத்தே தீயுண்டு அடுக்களைபோல" என உடம்பாடு பற்றிச் சொல்லுஞ்சொல் அந்நுவயச்சொல்லாம். "தீயில்லாதவிடத்துப் புகையில்லை, மடுப்போல" என மறுதலைபற்றிச் சொல்லுஞ் சொல் வெதிரேகச் சொல்லாம். இவ்விருவகைச் சொற்களையும் மேற்கோள் ஏது திருட்டாந்தம் உபநயம் நிகமனம் என்னும் ஐவகை உறுப்புக்களான் விளக்கமாகக் கூறுதலுமுண்டு.

அவற்றுள், "இம்மலை தீயுடைத்து" என்பது மேற்கோள். "புகையுடைமையால்" என்பது ஏது. "அடுக்களை போல" என்பது திருட்டாந்தம். "இதுவும் அங்ஙனம்" என்பது உபநயம். "ஆதலின் இங்ஙனம்" என்பது நிகமனம்.

இனி இந்த அநுமானமும் காட்சியநுமானம், கருதலநுமானம், ஆசமாநுமானம் என மூவகைப்படும். அவற்றுள், நாற்ற முதலிய

ஏதுப்பற்றி மலர் முதலிய காட்சிக்கு எட்டும்பொருளை ஆன்மாவினது ஞானசத்தியறிவது காட்சியநுமானம். உதாரணமாக, ஓர் மறைந்த விடத்துத் தாழை மலரிருக்க, அதனை அதன் மணம் வீசுதலாகிய ஏதுக்கொண்டு இங்குத் தாழை மலர் உள்ளது என அறிதல் காட்சியநுமானமாம். தாழை மலர் காட்சிப்படு பொருளாயினும் அதனை அதன் வாசனை வாயிலாக அறியவேண்டுதலின், அது காட்சியநுமானமெனப்பட்டது. ஒருவன் பேசும் மொழியைக் கொண்டு அவனுடைய அறிவு இவ்வளவென்று தன் குறிப்பால் அறிதல் கருதலநுமானம்.

முன்வினை யெனப்படும் இதமகிதங்களாவன முற்பிறவியின் அவ்வாறு நிகழும் முயற்சியேயாமானால், "இங்கும் அவை செயின் மேலைக் காகும்" என்றாற் போல வேதாகமங்களுட் சொல்லியது கொண்டு சொல்லாத பொருளையும் ஒப்புமைப் பற்றி ஊகித்துத் துணிவதாய் ஆன்ம சிற்சத்தி யறிவது ஆகமாநுமானமாம்.

இனி ஆகமமாவது அநாதி முத்த சித்துருவாகிய முதல்வன் அருளிச் செய்த வேதாகமங்களாம். தந்திரகலை மந்திரகலை உபதேசகலை யென்னும் அவற்றின் வகையாவன, வேதாகமங்கள் கன்மகாண்டம் உபாசனாகாண்டம் ஞானகாண்டம் என மூவகைப்படுதலின், அவற்றுட் கருமகாண்டம் பற்றிப் பின்னொடு முன் மாறுகோளின்றி அநுட்டித்தலை ஆன்மசிற்சத்தி யறிவது தந்திரகலையாம். உபாசனாகாண்டம் பற்றி மன முதலியவற்றை யடக்கிக் கடவுளை வழிபடும் உண்மையை ஆன்ம சிற்சத்தி யுணர்வது மந்திரகலை யெனப்படும். ஞானகாண்டம் பற்றித் தனக்கு முதலும் முடிவும் இல்லாத இறைவன் தன்னின் வேறல்லாத எண்குணமுடையனாதல், தன்னின் வேறாகிய பசுபாசங்களை யுடையனாதல் முதலிய தன்மைகளைத் தானுணருமாறும் பிறர்க்கு உணர்த்துமாறும் ஆன்மாவினது ஞானசத்தி யுணர்வது உபதேச கலை யெனப்படும்.

இவ்வாறு காட்சி அநுமானம் ஆகமம் என்னும் பிரமாணங்களின் இயல்பு பகுத்துணரப்படுமென்க.

---

## நன்கொடை

நம் சைவப் பத்திரிகைக்கு முன்னர் 50 ஆயுள் சந்தாதாரர்களைச் சேர்த்து 500 ரூபா கொடுத்தனுப்பி உபகரித்த கொத்தமங்கலம் ஸ்ரீமான் தெ. பழ. சித. சதாசிவம் செட்டியாரவர்கள், இம்மாதம் இருமுறை தாமே எம்மைத் தேடிவந்து, யாம் இப்பத்திரிகையை நடத்துதற் கண்படும் பிரயாசையையறிந்து மனமிளகி இப்பத்திரிகைக்கு நன்கொடையாகப் பத்துரூபா கொடுத்தார்கள். இதுவன்றோ தாளாண்மை. இவரன்றோ உண்மைச் சைவாபிமானி.

பத்திரிகாசிரியர்.

# பித்தவாயு லேக்கியம்

நெய் முதலிய பொருள்களின் விலையேற்றத்தையும் இதைச் சித்தப்படுத்துவதனால் நேரிடும் அதிக பிரயாசையையும் நோக்கி இடையில் சிலகாலமாக இந்த லேக்கிய விற்பனை நிறுத்தி வைக்கப் பட்டது. இதனையுண்டு குணமடையப் பெற்றவர்கள் பலர் அடிக் கடி வேண்டிக் கொள்வதனால் இது மறுபடியும் விற்பனைக்குச் சித்தம் செய்யப்பட்டிருக்கிறது. இதை உபயோகித்து வரு பவர்களுக்குப் பித்தவாயுவால் உண்டாகும் எவ்வகைப்பட்ட நோய்களும் அணுகா. ஜீரணசக்தி உண்டாம். சரீர புஷ்டியும் பலமும் உண்டாகும். இதுவே உண்மையான தாதுபுஷ்டி மருந்துமாம். வாய்க்கு ருசியாகவும் இருக்கும். பத்தியம் கட்டாயமல்ல. இச்சாபத்தியமிருந்தால் பின்னும் உத்தமம். சிறு பிள்ளைகள் சாப்பிட்டு வந்தால் அடிக்கடி வைத்தியரிடம் போக நேரிடாது. 20 வேளை சாப்பிடக்கூடிய மருந்தின் விலை ரூபா 2. வி. பி. தபாலில் அனுப்பினால் ரூபா 2—4—0.

இலங்கையில் இங்கிருந்து போகும் மருந்துக்கு அதிக வரி விதிப்பதனால் மணியார்டர் மூலமாக முன்பணம் அனுப்பு வோர்களுக்கு மாத்திரம் இலங்கைக்கு இந்த லேகியம் அனுப்பப் படும்.

இ. கண்ணப்ப முதலியார்,
நெ. 43, பாளையப்பன் வீதி,
சென்னை.

---

## தேவகோட்டை
## மெ. அரு. நா. சைவசித்தாந்த வித்தியாசாலை

இவ்வித்தியாசாலையில் மாணவர்களுக்கு சைவ சித்தாந்தக் கல்வி பயிற்றுவிக்கப் பெறுகிறது. இப்பொழுது சில மாணவர்கள் தாம் கற்க எண்ணிய நூல்கள் கற்று முடிந்தமையால் தமதிருப்பிடம் சென்றிருக்கின்றனர். புதிதாகச் சில மாணவர்களைச் சேர்ப்பதற்கு இட மிருக்கிறபடியால் சித்தாந்த சாத்திரம் பயில விரும்புவோர் தம்முடைய ஊர், பேர், முதலியவற்றையும் தாம் இதுவரை படித்திருக்கும் நூல் களையும் கண்டு ஸ்ரீமான் மெ. அரு. நா. இராமநாதஞ் செட்டியார் அவர்கட்குத் தெரிவித்து அவர்கள் அநுமதியின்பேரில் சேர்ந்து படிக்கலாம். வருபவர் சுத்தபோஜனமும் சிவதீக்ஷையும் உடையரா யிருத்தல் வேண்டும்.

இங்ஙனம்:
போ. முத்தைய பிள்ளை.

# தமிழகம்.

## (வாரம் இருமுறைப் பதிப்பு)

மலாய் நாட்டிற்கு தலைமைத் தமிழ்ப் பத்திரிகையாகிய "தமிழகம்" என்னும் உயர்தரப் பத்திரிகை வாரம் இருமுறையாய்ப் பிரதி திங்கள், வியாழக்கிழமைகள் தோறும் வெளிவருகிறது. நம் தமிழ் நாட்டிலிருந்து பினங், சிங்கப்பூர், மலாக்கா முதலிய பிரதேசங்களை உட்படுத்திய தொடுவாய்ப் பகுதிகளிலும், ஐக்கிய மலாய் நாடுகளிலும், சைகோன், சுமாத்ரா, ஜாவா, போர்னியோ, பிலிப்பைன்ஸ், பிஜி முதலிய கீழ் தேசப்பகுதிகளிலும் குடியேறியிருக்கும் தமிழ் ஜனங்களின் நன்மைகளைக் கருதியும் உரிமைகளைக் காக்கவும் இப்பத்திரிகை தோன்றியது. இஃது மலாய்நாடு, பிரஞ்சு, கொச்சின் சீனு, நெதர்லாண்டு இண்டீஸ், போர்னியோ, இந்தியா, பர்மா, இலங்கை முதலிய பல நாடுகளில் விஸ்தாரமாய்ப் பரவுகின்றது. இதன் வருட சந்தா, கீழ்தேசப் பகுதிகளுக்கு வெள்ளி 10.00, ஆறு மாதத்திற்கு வெள்ளி 5.50. இந்தியா, பர்மா, இலங்கை, நேட்டால், கென்யா முதலிய மேல் நாடுகளுக்கு வருட சந்தா ரூபா 15. ஆறு மாதங்களுக்கு ரூபா 8. நீடித்த விளம்பரங்கள் செய்வோர் மானேஜருக்கு எழுதித் தெரிந்து கொள்ளலாம்.

மானேஜர்:— "தமிழகம்" ஆபீஸ்,
நெம்பர் 190, பத்துரோட்டு, கோலாலம்பூர்,
ஐக்கிய மலாய் நாடுகள்.

---

# அறிவிப்பு

"சிவார்ச்சன சந்திரிகை" என்னும் பெயருடைய நூல் ஒன்று ஸ்ரீ அப்பைய தீக்ஷிதரவர்களாலே செய்யப்பட்டு இதுவரை அச்சில் வாராமலிருந்தது. அதனை இப்பொழுது நம்முடைய சங்கத்திலிருந்து நாகரலிபியில் அச்சிட்டிருக்கிறோம். இதில் ஆத்மார்த்த பூசைக்குரிய எல்லா விஷயங்களும் அடங்கியுள்ளன. வேண்டுவோர் நமக்கெழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

| | | | |
|---|---|---|---|
| கலிக்கோ பயிண்டு | ... | ... ரூ. | 1—4—0 |
| சாதாரண பயிண்டு | ... | ... ரூ. | 1—0—0 |

தபாற் சார்ஜ் வேறு

இங்ஙனம்:
காரியதரிசி,

சிவாகம சித்தாந்த பரிபாலன சங்கம், தேவகோட்டை

---

Printed at the Sadhu Press, Royapettah and Published by
I. Authimoola Mudaliar, G. T. Madras.